பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 27உ (11—7—67) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 28உ (12—7—67) புதன் [இதழ்: 23

பக்தவத்சலம் மீது குற்றச்சாட்டு

சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம்

ஓர் உயர்தரப் போலீசு அதிகாரி மீதும் புகார்

சென்னை, ஜூலை 11—

"முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்த தகவல் குறித்து விவாதிக்க வேண்டும்" என்று சட்டமன்றத்தில், திரு. ஏ. பாலசுப்பிரமணியம் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

"திரு. பக்தவத்சலம் பேசிய பேச்சும், ஓர் உயர்தரப் போலீசு அதிகாரியின் அறிக்கையும், திட்டமிட்டுச் செய்யப்படும் காரியமாகும்" என்று குறிப்பிட்டு திரு. வி. கே. கோதண்டராமன் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

ஏ. பாலசுப்பிரமணியம்

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் தமது தீர்மானத்தை வலியுறுத்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"முன்னாள் முதலமைச்சரான திரு. பக்தவத்சலம், தீ விபத்துக்குக் காரணம் யார் என்பதைக் காட்டுவதற்கான போதிய ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும், அதை இப்போது தாம் வெளியிடப் போவதில்லை என்றும் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

தீ விபத்துக்கள் இன்னும் அங்கும் இங்குமாகத் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன; அந்த ஆபத்து இன்னும் நீங்கிய பாடில்லை.

இந்த நேரத்தில், தம்மிடம் போதிய தகவல் இருந்தும் அதனை வெளியிட அவர் மறுப்பது, விபத்துக்களைத் தவிர்ப்பதற்குப் பதிலாகப் பொதுமக்களைக் குழப்புவதாகும்.

திரு. பக்தவத்சலத்தின் பேச்சு, 9-ந்தேதி 'மித்திரன்' ஏட்டிலும், அதேபோல் 'தினமணி' இதழிலும் வெளியாகியிருக்கிறது. இரண்டு இதழ்களின் வாசகங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

குற்றவாளிகளைக் காட்டத் தம்மிடம் போதுமான ஆதாரம் இருந்தும் அதனைப் போலீசிடம் தெரிவிக்க அவர் மறுப்பானேன்? திரு. பக்தவத்சலம் பொறுப்பான பதவியில் இருந்தவர்; முதிர்ந்த அரசியல்வாதி; தமிழ்நாட்டுக்கே வழிகாட்டக் கூடிய தலைவர்களில் ஒருவர்; சட்டம் படித்த வழக்கறிஞர்; இருந்தும், இப்படிப் பேசியிருப்பது, பொதுமக்களுக்குத் தவறான வழிகாட்டுவதாகும்.

கி. பு. கோ. 44-வது பிரிவின்கீழ் சில குற்றங்கள் செய்வதோ, செய்ய உத்தேசித்திருப்பதோ தெரியவந்தால் அதைப் போலீசுக்குத் தரவேண்டும்.

இ. பி. கோ. 202-வது பிரிவின்கீழ் இப்படிச் சொல்லாமல் இருப்பது குற்றமாகும்.

சட்டம் தெரிந்திருந்தும், பிறருக்கு வழிகாட்டக்கூடிய குற்றம் புரிந்திருக்கிறார்.

ஏற்கனவே, 'தீ விபத்துக்களுக்கு அரசியல் காரணம் இருக்குமோ' எனச் சந்தேகமாக இருந்தது. இப்போது, இந்த அரசியல் போக்கும் நோக்கும், சந்தேகத்தை மேலும் பலமாக்குகிறது.

எனவே, பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த அவசரப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த மன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும்."

வி. கே. கோதண்டராமன்

திரு. வி. கே. கோதண்டராமன் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"சென்ற சில நாட்களாகத் தொழிலாளர்களும், ஏழைகளும் வசிக்கும் குடிசைகள் கொளுத்தப்பட்டு வருவது குறித்து முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பேசிய பேச்சும், ஒரு போலீசு உயர்தர அதிகாரி விடுத்த அறிக்கையும் பொதுமக்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்துவதுடன், அவர்கள் இருவரும் திட்டமிட்டு இந்தக் காரியத்தைச் செய்துவருவதாகக் கருதத் தோன்றுகிறது.

நான் ஏற்கனவே போலீசு அதிகாரிமீது ஓர் உரிமைப் பிரச்சினையை இதே மன்றத்தில் கிளப்பியிருக்கிறேன்.

இப்படி ஒரு முன்னாள் முதலமைச்சரும், போலீசு உயர்தர அதிகாரியும் திட்டமிட்டே செயல்பட்டு வருகிறார்கள் எனக் கருதுவதற்கு இடமிருப்பதுடன், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர், பொறுப்புள்ள காங்கிரசுக்காரர்கள், 'தி. மு. கழகத்தினரும், இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினரும்தான் தீ வைத்து வருவதாகப் பேசி, பொதுமக்களிடையே வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கின்றனர்."

அவைத் தலைவர் சி.பா. ஆதித்தனார் இது குறித்துத் தீர்ப்பளிக்கையில், 'இப்பிரச்சினை இந்தப் பேரவையைப் பாதிக்கக்கூடியதாக இருக்குமானால் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்திருக்கலாம்' என்றும், 'இது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொள்ளத் தக்கதல்ல' என்றும் கூறித் தள்ளுபடி செய்தார்.

தூத்துக்குடித் திட்டம்

மத்திய அரசின் போக்கால் மனக் குழப்பம்

சென்னை, ஜூலை 10—

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் நன்கு ஆய்வு செய்யப்பட்டு—இந்தத் திட்டம் நிறைவேற ரூ. 24 கோடி செலவாகும் என மதிப்பீடும் செய்யப்பட்டு—இதுவரை ரூ. 6 கோடி வரையில் துவக்க வேலைகளுக்கு செலவிடவும்பட்டிருக்கிறது.

"முதல் ஆண்டு துவக்க வேலைக்காக 1963—64-ல் ஒரு கோடியும், 1964--65-ல் ரூ. 2 கோடியும் மத்திய அரசு செலவிட்டிருக்கிறது; மாநில அரசு ஒரு கோடி வரை செலவிட்டிருக்கிறது.

"ஆக, இந்தத் திட்டத்தின் மீது ரூ. 6 கோடி வரையில் செலவிடப்பட்ட பிறகு, இப்போது, 'இந்தத் திட்டத்தை மத்திய அரசு கைவிட்டுவிடுமோ' என்று குழப்பம் அடையும் விதத்தில், 'இந்த ஆண்டுக்கு ரூ. 90 இலட்சம்தான் கொடுக்க முடியும்' என்று மத்திய அரசு சொல்லியது; பிறகு, 'அந்தத் தொகைகூட முடியாது; ரூ. 50 இலட்சம்' என்று அறிவித்துள்ளது.

"'தூத்துக்குடித் திட்டத்தை மத்திய அரசு கைவிட்டுவிடுமோ' என்ற அச்சத்தையும், மனக் குழப்பத்தையும், இந்தச் செய்கை மாநில அரசுக்கு ஏற்படுத்தியது.

"மொத்த மதிப்பீடான ரூ. 24 கோடியில் ரூ. 50 இலட்சம் எங்கே? ஆண்டுக்கு ரூ. 2 கோடி கொடுத்துவந்த மத்திய அரசு, இப்போது கொடுக்க முன்வந்துள்ள ரூ. 50 இலட்சம் எங்கே?

"ஆக, 'தூத்துக்குடித் திட்டம் கட்டாயம் வரும்' என்பது உண்மையானால்—'தூத்துக்குடித் திட்டத்தை மத்திய அரசு கைவிடாது' என்பது உண்மையானால், அதற்கு அறிகுறியாக ரூ. 50 இலட்சத்திற்குப் பதில் முந்திய ஆண்டில் கொடுத்ததைப்போல் இந்த ஆண்டும் மத்திய அரசு கொடுக்க முன்வர வேண்டும்."

பொதுப் பணி அமைச்சர்
—மு. கருணாநிதி
(சட்ட மன்றத்தில்)

டிராம் போக்குவரத்து அரசு மேற்கொள்ளுகிறது

கல்கத்தா நகரில் டிராம் போக்குவரத்தை மாநில அரசு மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்வதென்றும், நகரில் போக்குவரத்தில் நெருக்கடி நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு இந்த நடவடிக்கையை எடுப்பதென்றும் மேற்கு வங்க அமைச்சரவை முடிவு செய்தது.

சென்னை மாநகராட்சி உறுப்பினர் எண்ணிக்கை

120 ஆக உயர்த்த மசோதா

சென்னை, ஜூலை 10—

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 100-லிருந்து 120-ஆக உயர்த்த வகை செய்யும் சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதாவை, சட்டமன்றத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துச்சாமி கொண்டுவந்தார்.

சென்னை நகர சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை பத்திலிருந்து பன்னிரண்டாக உயர்த்தப்பட்டதன் விளைவாக மாநகராட்சி உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது.

சென்னை மருத்துவமனையில் டி. கே. சீனிவாசன்

சென்னை, ஜூலை 11—

தி. மு. க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு, நேற்றிரவு சிகிச்சைக்காக சென்னை தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்; 'சி' வகுப்பு 34-வது வார்டு 27-வது எண் படுக்கையில் இருந்துவருகிறார்.

'நவசக்தி' இதழ் மீது உரிமைப் பிரச்சினை

சென்னை, ஜூலை 11—

'நவசக்தி' இதழ்மீது இன்று சட்டமன்றத்தில் ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரச்சினை மீதான தமது தீர்ப்பை 18-ந்தேதி அறிவிப்பதாக அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் கூறினார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் விடுத்ததாக 7-7-67 'நவசக்தி' இதழில் வெளியாகியுள்ள அறிக்கையில், முதலமைச்சர் பேச்சைப் பற்றி திரு. கருத்திருமன் குறிப்பிட்டுள்ளதாக உள்ள வாசகங்களை திரு. கருத்திருமனே மறுத்திருப்பதாலும், தம் அறிக்கையின் வாசகங்கள் விட்டு விட்டு வெளியிடப்பட்டிருப்பதாக அவர் கூறியிருப்பதாலும், அந்த வாசகங்களைப் பற்றியும், மேலும் அதே இதழில் வேறு சில வாசகங்கள் சட்டமன்ற உரிமையைப் பாதிப்பனவாகவும், அவமதிப்பதாகவும் உள்ளதாலும், அந்த இதழ்மீது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதாக விளக்கிய அவைத் தலைவர், இதுபற்றி அந்தப் பத்திரிகையின் வெளியீட்டாளர் வருத்தம் தெரிவிக்கப்போகிறாரா என்பதையறிந்து பின்னர் தக்க முடிவு கூறுவதாக அறிவித்தார்.

புதிய இயக்கம்!

கல்கத்தா, ஜூலை 10—

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 24 பரக்கானா மாவட்டத்தில் ஒரு புதுமாதிரியான விவசாயிகள் கிளர்ச்சி ஆரம்பமாகியுள்ளது.

விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களை வசப்படுத்திக்கொண்டு, நிலமில்லாத விவசாயிகளிடையே அவற்றைக் கொடுப்பதுதான் இப்புதிய இயக்கம்.

தோற்ற அமைச்சர் பதவி விலகினார்!

இலட்சுமணபுரி, ஜூலை 10—

உ. பி.-யில் மேலவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற போக்குவரத்து அமைச்சர் மான் சிங் வர்மா பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

தூத்துக்குடித் திட்டம்

கோரிக்கையை வலியுறுத்த 'எழுச்சி நாள்' தேவைதான்!

"தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்பே நிபுணர்களால் ஆராயப்பட்டு—'அத்திட்டம் நாட்டிற்கு மிகவும் ஆதாயம் உள்ளது; நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப்படுவது' என்று ஒப்புதல் அளிக்கப்பட்டதாகும்.

"இந்தத் திட்டத்தின் முன்னோட்ட வேலைகளைத் துவக்கி வைக்கையில் மறைந்த பண்டித நேரு, 'இத்திட்டம் மிகவும் அவசியம் என்பதற்கு வாதங்களே தேவை இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்! அதன் பிறகு இன்று வரை, இந்தத் திட்டத்திற்காக ரூ. 6 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது!

"இங்கு பேசிய எதிர்க் கட்சித் தலைவரோ, 'தூத்துக்குடித் திட்டம் எப்படியும் வரத்தானே போகிறது? இதற்கு எழுச்சி நாள் எதற்கு?' என்று கேட்கிறார்.

"ஆனால் கடந்த வாரம் தமிழகத்திற்கு வந்திருந்த மத்திய அமைச்சர், 'இத்திட்டம் கைவிடப்படாது' என்று ஆங்கிலத்தில் சொன்னார். தூத்துக்குடித் திட்டம் வருவது அவ்வளவு உண்மையாக இருந்தால், மத்திய அமைச்சர் என்ன சொல்லியிருக்க வேண்டும்?—'தூத்துக்குடித் திட்டம் நிறைவேற்றப்படும்' என்று உறுதியான குரலில் சொல்லியிருப்பார்; ஆனால் அவர் சொன்னது, 'கைவிடப்படாது' என்பது!

"அதற்கு மறுதினமே, இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம்குறித்து தலைமையமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்திற்கு எனக்குப் பதில் வந்தது; அதில் 'நீங்கள் எழுதியிருக்கும் பிரச்சினையை, அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து பரிசீலிக்கிறேன்' என்றுதான் இருந்தது.

"ஆக, 'தூத்துக்குடித் திட்டம் வரும்' என்பது எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதுபோல் அவ்வளவு நம்பிக்கையில்லாத நிலையில்தான் இருக்கிறது! "ஆகையால்தான் சொல்கிறேன் — 'எழுச்சி நாள்' தேவைதான் என்று!

"இக்கோரிக்கையை வலியுறுத்த வந்து கலந்து கொள்ளும்படி காங்கிரசுக்காரர்களையும் மீண்டும் அன்புடன் அழைக்கிறேன்."

—முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

மூடிமறைத்துப் பயனில்லை— மக்கள் மன்றத்துக்கு வரவேண்டும்!

மூன்ரும் திட்டத்தில் சேர்த்த பின்னும் சேலம் திட்டத்தை நிறைவேற்ருததேன்?

ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொண்ட எழுச்சிநாளை காங்கிரசார் புறக்கணிப்பதன் பொருள் என்ன?

சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணு வேண்டுகோள்

சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற போது விவாதத்துக்குப் பதிலளிக்கும்வகையில் முதலமைசசர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையில், சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை வற்புறுத்தும்வகையில் நடைபெறவிருக்கும் 'எழுச்சி நாள்' குறித்தும், அதில் எதிர்க் கட்சியினர் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்புவிடுத்தும் பேசியதாவது :—

நியாயத்தின் அடிப்படையைத் தகர்த்துவிட்டனரே!

நாங்கள் மத்திய அரசுடன் மோதிக் கொள்வோம் என்று எவரும் கருதத் தேவையில்லை. சூலை 23—மோதுகின்ற காரியமல்ல! சேலம் இரும்பாலைபற்றிப் பதினைந்து வருடங்களாகப் பேசிப் பேசி நம்முடைய மக்கள் இன்றையத்தினம் சலிப்படைந்து போயிருக்கிருர்கள். எனவே, அதைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை — 'முன்பு இருந்த காங்கிரசு அரசும் அதைப் பெற்றுத் தரவில்லை; இப்போதுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசும் பெற்றுத் தரவில்லை; சேலம் இரும்பாலை என்பது முடியவே முடியாத ஒன்ருே' என்று மக்கள் எண்ணக்கூடும்.

சேலம் இரும்பாலைத் திட்டம், எவ்வளவு நியாயத்தின் அடிப்படையில் கேட்கப்பட்டது?

இன்னும் சொல்லப்போனுல், நாம் வெட்கப்பட வேண்டும்—மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது இணைக்கப்பட்டுவிட்டது; இணைக்கப்பட்டுவிட்ட திட்டத்தை, 'நிறைவேற்ற முடியாது என்று மத்திய அரசு சொல்லுமானுல், அதை முச்சந்தியில் நிறுத்துவோம்' என்று நாங்கள் சொல்லக்கூடாதா?

வேறுபாடு தெரியாமல் 'குழப்பம்' செய்வதா?

'முச்சந்தி' என்பதற்கும், 'சந்து முனை' என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல், காங்கிரசு நண்பர்கள் பேசுகிருர்கள் என்று கருதுகிறேன்.

'முச்சந்தி' என்பது கண்ணியமானது; 'சந்து முனை' என்பது தரக்குறைவானது.

உங்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலர், 'முச்சந்திக்கும்—சந்து முனைக்கும் வேறுபாடு தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிருர்கள்! உங்களால் முடிந்தால் அவர்களைத் திருத்துங்கள்!

'முச்சந்தி' என்பது, 'ப்பளிக் போரம்'; அதைத்தான் 'முச்சந்தி' என்று சொல்லுவது?

'முச்சந்தி என்பது வேண்டாம்; என்னவோபோல் இருக்கிறது' என்ருல், 'மக்கள் மன்றத்தில்' என்று சொல்லலாம்.

'மக்கள் மன்றம்' என்பது, கண்ணியமான வார்த்தை; அவ்வாறு சொல்லத் தயாராக இருக்கிறேன்.

ஊர் கூடித் தேர் இழுக்கையில் உங்கள் நிலை என்ன?

மக்கள் மன்றத்தில் இவை விளக்கப்பட வேண்டும். மூடி மூடி வைத்துப் பயன் இல்லை.

'சூலை 23—அதை விளக்குவதற்கான நாள் -- எழுச்சி தருகிற நாள்' என்ற முறையில் பல கட்சிகளும் வரவேற்றிருக்கின்றன. காங்கிரசுதான், 'சேரமாட்டோம்' என்று விடுத்துள்ள அறிக்கையைப் பார்த்தேன்,

சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்டுகள்—அதிலே வலதுசாரிக் கம்யூனிஸ்டுகள்; இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்—தமிழரசுக் கழகம், சோஷலிஸ்டுக் கட்சி—பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய அனைத்துமே ஒப்புக்கொள்ளுகின்றன.

'ஊரெல்லாம் கூடித் தேர் இழுக்கும்போது ஒரு கை கொடுங்கள்' என்ருல், 'இந்தத் தேரை இப்படி இழுக்கக்கூடாது; பின்னுல் இருந்து தள்ளவேண்டும்' என்று—யாரோ உங்களை என்னவோ செய்வார்கள் என்ற பயத்தில் — 'வரமாட்டோம்' என்று சொல்லுகின்றீர்கள் என்று நான் கூறவில்லை—மக்கள் கருதிக்கொள்ளுவார்கள்.

ஆகவே, 'காங்கிரசுக் கட்சியும் இந்த சேலம் திட்டத்திலே—தூத்துக்குடித் திட்டத்திலே நல்ல ஆர்வத்தோடு இருக்கிறது' என்று மெய்ப்பித்துக் கொள்ளுவதற்காக இந்த எழுச்சி நாளிலே கலந்து கொள்ள வேண்டுமென்று மறுபடியும் அன்போடு அழைக்கிறேன்.”

தவருன வாதத்தைக்கூறி தப்பித்துக்கொள்ள முயலாதீர்!

காங்கிரசு உறுப்பினர்கள், 'வரியே போடமாட்டோம் என்று சொல்லிவிட்டு, வரி போட்டு விட்டனர்' என்றதோர் தவருன வாதத்தை எடுத்துச் சொன்னுர்கள்; 'வரி தேவைதான் என்பதைஇப்போது ஒத்துக்கொண்டார்கள்' என்றும் கூறினுர்கள்.

சொல்லப்போனுல், இப்போது வரியே இல்லை; இருக்கிற வரியைச் சிறிது ஏற்றுவதை 'வரி' என்று சொல்வதற்கில்லை!

'புஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கிவிட்டு நஞ்சை நிலத்திற்கு வரியை நீக்கவில்லையே' என்று கேட்டார்கள்.

கட்டபொம்மன் காலத்தில் கேட்கப்பட்டது--இன்று நிறைவேறுகிறது!

நஞ்சை நிலத்திற்கும் வரியை நீக்குவதற்குத் தீவிரமான ஆலோசனையில் இருக்கிரேம் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன்.

தெரிவித்துக்கொண்ட பிறகும் சொல்கிறேன்-எப்படி அரசினர் செய்கின்ற வசதிகளை முதலில் ஏழைகளுக்குச் செய்து கொடுத்துவிட்டுப் பிறகு கோஞ்சம் வசதியுள்ளவர்களுக்குப் போகவேண்டுமோ — அதைப் போல்தான், நிலத்திலேகூட புஞ்சை என்பது ஏழை; நஞ்சை என்பது கோஞ்சம் வசதியுள்ளது.

ஏழை நிலத்திற்கு முதலிலே வரியை நீக்கிவிட்டோம்; அது கட்டபொம்மன் காலத்திலிருந்து கேட்கப்பட்டு வருகின்ற ஒன்று. 'வானம் பொழியுது, பூமி விளையுது— கும்பினிக்கு ஏன் கப்பம்?' என்று கட்டபொம்மன் காலத்திலேயே கேட்கப்பட்டது; அதை இப்போது செய்திருக்கிரேம். மற்றதற்கும் வரி நீக்குவதற்கு ஆய்வு நடத்தப்படும் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை.

அன்றைய நிலைமை இன்று இல்லை!

விவசாய வருமான வரிக் கணக்கு வைப்பதில் கஷ்டங்களைப் பற்றியெல்லாம் நண்பர்கள் சொனனுர்கள் — குறிப்பாக, எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் வெகு விளக்கமாகச் சொன்னுர்கள்.

கருத்திருமன் அவர்கள் எப்போது பேசினுலும்-உற்றுக் கேட்டால்-விவசாயிகளுக்காதத்தான் பேசுவார்; 'கட்சிப் பாகுபாடு' என்பதுகூட அதிலே இருக்காது. ஆட்சியில் காங்கிரசுக் கட்சி இருந்தபோதும் அதைத்தான் கேட்டார். அவரைப் பற்றி நானும், சி.சுப்பிரமணியம் அவர்களும் வேடிக்கையாகப் பேசிக் கொள்வது வாடிக்கை; 'இது கருத்திருமனின் பொருளாதாரம்' என்று! அதிலே, முக்கியத்துவம் இருக்கிறது-இல்லை என்று சொல்லவில்லை.

'விவசாயம் செய்பவர்களுக்கு உற்சாகம் அளித்தால்தான் விவசாயம் வளரும்' என்பதை நான் முழுக்க முழுக்க ஒத்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமோ அதை அளிக்க வேண்டுமென்பதையும் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனுல், 'கணக்கே வைக்கமுடியாது' என்று சொல்லுவது, 10 வருடத்திற்கு முன்னுலே வேண்டுமானுல் முடியாமல் இருக்கலாம்–இப்போது கொஞ்சம் வளர்ந்திருக்கிரேம்; இப்போது இருக்கிற சிரமம்கூட அடுத்து ஏற்படாமல் இருக்கலாம்!

நாட்டிற்கு நல்ல எதிர்காலம் உண்டு

ஒன்றை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்; 'படித்தவர்கள் வேலைக்குப் போவார்கள்—படிக்காதவர்கள்தான் விவசாயம் செய்வார்கள்' என்பதை மாற்ற வேண்டும்.

மதிப்பிற்குரிய நண்பர் கருத்திருமன் அவர்கள் பி.எஸ்சி. படித்தவர்கள். அவர் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிருரே தவிர, உத்தியோகத்தை நாடிச் செல்லவில்லை,

பல முற்போக்கான விவசாயிகள் ஒவ்வொரு கிராமத்திலும் நான்கைந்து பேர்களாவது உண்டாகிக்கொண்டு வருகிருர்கள்.

15 வருடங்களுக்குப் பிறகு கிராமப்புறப் பண்ணைகளுக்குப் போனுல் எம்.ஏ. படித்தவர்களும், பி.ஏ. படித்தவர்களும் டிராக்டர்களை ஓட்டிக்கொண்டிருப்பதைப் பார்ப்போம். அப்போதுதான் நம்முடைய நாட்டுக்கு நல்ல காலம் என்று கருதலாம்.

அப்படிப்பட்ட ஒரு வளர்ச்சி விவசாயத்திற்கு இயற்கையாக ஏற்படுகிறபோது, 'கணக்கு எழுத முடியாது' என்பதை அவ்வளவாக ஒத்துக்கொள்ளுவதற்கில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் மட்டுமல்லாமல், நம்முடைய அவினுசி தொகுதி உறுப்பினர் அவர்கள் வெகு உருக்கத்தோடு சொன்னுர்; திரு. மாரிமுத்து அவர்களும் சொன்னுர்; இவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லி என்னுடைய மனத்தை வெகுவாக மாற்றிவிட்டார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருத்தமொன்றை ஏற்றுக்கொள்கிறேன்

இந்தக் கம்பவுண்டிங் என்பதை வைத்துக்கொண்டு அதிலே எதிர்பார்க்கின்ற பலனையும் பெறுவதற்கு மாற்று என்ன என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டேன்' அவர், விவசாயிகளைக் கலந்து சொல்வதாகச் சொன்னுர்.

அதற்கான மாற்ருன—'12½ ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய அந்த அளவைக் குறைத்து, போடப்பட்டிருக்கும் 5 காசை -- 15 காசு எனவாக்கலாம்; வேண்டுமானுல் மூன்று அல்லது நான்கு மடங்கு ஆக்குங்கள்' என்று பேசினுர்கள்; அந்த அளவுக்கு வேண்டாம்; அந்த விகிதத்தை இரண்டு மடங்கு உயர்த்தி, 12½ ஏக்கர் என்பதை 5 ஏக்கர் என்று குறைத்து கம்பவுண்டிங் வைத்துக்கொள்ளலாம்—என்ற திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்,

விவசாயிகளுக்கு நன்மை செய்வதில் அரசு தயாராக இருக்கிறது

இதிலிருந்து, நீங்கள் என்னைப் பற்றி மூன்று கருத்துக்களைக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்; 'விவசாயிகளிடத்தில் அக்கறை இருக்கிறது' என்பது ஒன்று; அதே நேரத்தில், 'அரசினருடைய வருமானம் குறையக்கூடாது' என்பதிலே உள்ள அக்கறை இரண்டாவது; மூன்ருவது—உங்களை எவ்வளவு மதிக்கிறேன் என்பதாகும்.

“விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு இந்த அரசு எப்போதும் தயாராயிருக்கிறது” என்பதை, இப்போது நான் ஏற்றுக்கொண்டிருப்பதில் இருந்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றவைபற்றியெல்லாம் நான் குறிப்பிடாமல் விட்டுவிட்டால்——'குறிப்பிடவில்லையே' என்றும் யாரும் கருதமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்; ஏனெனில், சிலர் 'பட்ஜெட்' பற்றிச் சொன்னுர்கள்—'என்ன பட்ஜெட் இது? இதில் கைத்தறி பற்றி ஒன்றும் காணுேமே; -- பொற்கொல்லர்கள் பற்றி ஒன்றும் காணுேமே' என்று.

பட்ஜெட்டில் கோடிட்டுக் காட்டுவது தவிர எல்லாவற்றையும் புகுத்துவது என்பது முடியாத காரியம்.

அதேபோல் நானும், உறுப்பனர்கள் கூறிய எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுவது முடியாத காரியம்.

ஆனுல், அவர்கள் சொன்ன ஒவ்வொன்றையும்—அவைகளுக்குத் தரப்பட வேண்டிய மதிப்போடு நான் கவனித்திருக்கிறேன் என்பதையும், அவற்றைக் குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் தெரிவித்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கைக்கு உங்களுடைய முழு ஆதரவையும் தந்து, எங்களை ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் பேச்சை நிறுத்திக் கொள்கிறேன்.”

ஆர். பொன்னப்ப நாடார் :—“Will the Government repeal the Travancore-Cochin Agricultural Income Tax Act, as far as the Kanyakumari district is concerned, in case the concession in granted to the agriculturists in other parts of the State?”

அண்ணு :—“மாண்புமிகு உறுப்பினர் நினைவுபடுத்தியதை, இது பற்றி எல்லாத் தலைவர்களும் கலந்து பேசுகிறபோது அது பற்றிப் பேசலாம். அவர் விளக்கம் கேட்டதற்குத் தொடர்பாக இன்னெரு விளக்கத்தையும் நான் சொல்ல இதை வாய்ப்பாகக் கொள்கிறேன்.

என். ஜி. ஓ. பிரச்சினை

பல விஷயங்கள் பட்ஜெட்டில் வரவில்லை என்பதாலும்—என் பேச்சில் வரவில்லை என்பதாலும், அவைகளில் எனக்கு அக்கறை இல்லை என்று கருதத் தேவையில்லை.

அப்படி நான் பட்ஜெட்டில் குறிப்பிடாமல்—என் பேச்சிலே குறிப்பிடாமல்—ஆனுல் என் உள்ளத்திலே மிகுந்த மதிப்பான இடத்தை வைத்திருக்கிற பிரச்சினை, என். ஜி. ஓ.-க்கள் பிரச்சினையாகும்.

பல நண்பர்கள் என்.ஜி.ஓ.-க்களுக்காக வாதாடினுர்கள். இவ்வளவு நிரம்ப நண்பர்கள் என்.ஜி.ஓ.-க்களுக்குக் கிடைப்பதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி.

என்.ஜி.ஓ.-க்கள் எல்லாக் கட்சிகளின் நண்பர்களாக வேண்டுமென்று விரும்புகிறேன்.

அவர்கள் பிரச்சினைபற்றி அவர்களுடைய அமைப்பிலே சம்பந்தப்பட்டவர்களிடத்திலே நான் கலந்து பேசியிருக்கிறேன்.

இப்போதிருக்கிற நிதிநிலை நெருக்கடிகளை அவர்களிடத்தில் எடுத்து விளக்கியிருக்கிறேன்.

இப்போது உணவு உதவித் தொகை கொடுப்பதால், என்.ஜி.ஓ.-க்கள் குடும்பங்களில்கூட, ஒரு குடும்பத்திற்கு ரூ. 7-லிருந்து ரூ. 10-வரையில் அவர்களுக்கு புதிய வசதி கிடைத்திருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன்.

அவர்கள் கேட்டிருப்பது, நகர ஈட்டு அலவன்சும், வீட்டு வாடகை அலவன்சும் போன்றவைகளாகும். அவைகளைப் பற்றியெல்லாம் புள்ளிவிவரங்கள் சேகரிக்கும்படியும் அது பற்றிய முழு விவரத்தை என்னிடம் தரும்படியும், இன்னும் சில மாதங்களில் நிதிநிலைமை நல்லபடியாக வளரவளர அது பற்றியெல்லாம் கவனிப்பதாகவும், மற்றும் உடனடியாக அவர்கள் கேட்ட அந்தப் பிரச்சினை இல்லாவிட்டாலும் அவர்களுக்கு வசதி தரக்கூடிய வேறு சில நன்மைகளை அவர்களுக்குச் செய்யக்கூடும் என்றும் நான் வாக்களித்திருக்கிறேன்.

ஆகவே, என்.ஜி.ஓ.-க்கள் விஷயத்தில் நாங்கள் அக்கறையற்று இருந்துவிட்டோம் என்று யாரும் கருதமாட்டார்கள்.

'வலி'தான் ஏற்படும் --- 'வலிவு' வராது!

சில பேர்கள் சொல்லுவார்கள்—சொல்லுகிறவர்களைச் சொல்ல வேண்டாம் என்று நான் தடுக்க விரும்பவில்லை; எதையாவது சொல்லி வலிவு தேடிக்கொண்டு இந்தப் பொறுப்பை என்னிடமிருந்து எடுத்துக்கொண்டால்

(3-ம் பக்கம் பார்க்க)

வெட்கப்படுவீர் -- வேதனையுறுவீர்!

“தீ விபத்துக்களினால் ஏற்பட்ட கொடுமைகள், யார் கண்ணில் பார்த்தாலும் தெரியும்! கட்டிய சேலையுடன் தாய்மார்கள் வெளியே நிற்கிறார்கள்; மாற்றிக் கட்ட வேண்டிய சேலை உள்ளே எரிந்து போய்விட்டது! அவர்கள் எல்லாம் யார்—நம் இரத்தத்தின் இரத்தமாய் — நம் சதையின் சதையாய் — நமது நாட்டில் பிறந்து வாழ்பவர்கள்தானே!

“புள்ளிவிவரம் கூறுகிறது—20 ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்ததாக; ஆனால், மாற்றுச் சேலையை தீக்கு இரையாக்கிவிட்டுத் தவிக்கும் தாய்மார்களை, இன்றும் காண்கிறோம்!

“மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டதாகக் கூறுகிறோம்—ஏராளமான குடிசைகள் இன்றும் இருப்பதைக் காண்கிறோம்!

“அணைக்கட்டுகள் ஏராளமாகக் கட்டியதாகக் கூறுகிறோம்; ஆனால், ஏழைகளின் கண்களிலிருந்து வடியும் கண்ணீர் அத்தனை அணைகளுக்கும் போதுமான அளவில் இருக்கிறது!

“இதைப் பற்றி எல்லாக் கட்சிகளும், ஆளும் பொறுப்பிலுள்ள எங்கள் கட்சியும் வெட்கப்பட வேண்டும்!”

--முதலமைச்சர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

திரைப் படத்தில் தமிழகத் திருவிழாக் காட்சி

சென்னை, ஜூலை 8—

“‘கண்காட்சிகளும் திருவிழாக்களும்’ என்ற செய்திப் படம் தயாரிப்பதற்காக தேவஸ்தானங்களிடமிருந்து ரூ. 2,18,000 வசூல் செய்யப்பட்டது; அந்தப் படத்தைத் தயாரிக்க இந்தத் தொகை முழுதும் செலவழிக்கப்பட்டு மேலும் ரூ. 8,750 செலுத்தப்பட வேண்டியிருக்கிறது; 7,077 அடி நீளம் அந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது”

என்று அறநிலையத்துறை யமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

மேலும் துணைக் கேள்விகட்கு அவர் பதிலளித்ததாவது:—

“தமிழகத் திருக்கோயில்களின் கலைச் சிறப்பையும், கோலாகலத் திருவிழாக் காட்சிகளையும் வெளிநாட்டினர் கண்டறியும் வகையில் இந்தப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது;8 தேவஸ்தானங்களின் நிதியைக்கொண்டு இது எடுக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு தேவஸ்தானத்திடமிருந்தும் ரூ. 27,250 வசூலிக்கப்பட்டது.

“இந்தப் படம் எடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது; இன்னும் திரையிடப்படவில்லை; நான் கூட இன்னும் பார்க்கவில்லை.

“இந்தப் படத்தின்மூலம் வருமானம் எதிர்பார்க்க முடியாது என்பதால், சுவாமி விவேகானந்தர் பற்றிய படம் ஒன்று இருக்கிறது. அதையும் இத்துடன் இணைத்து வணிக அடிப்படையில் திரையிட யோசிக்கப்படுகிறது.

“வெளிநாட்டிலிருந்து வருவோர் பல இடங்களுக்கும் சென்று கோயில்களைப் பார்ப்பதற்குப் பதிலாக, ஒரே இடத்திலிருந்து அவைகளைப் பார்த்துக் களிக்க இந்தப் படம் பயன்படுவதால், அவர்கள் சென்று பார்க்கச் செலவிடும் பணத்தை இதற்கு வசூலிக்கலாமா என்றும் யோசிக்கப்படுகிறது.”

நன்னோக்குடன் துவக்கப்பட்டதே மதிய உணவுத் திட்டம்

குறைபாடுகளை நீக்கிச்சிறப்பாகச் செயல்பட அரசு முயலும்

சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 8—

“அமெரிக்க கேர் நிறுவனத்தின் உதவியுடன் கூடிய மதிய உணவுத் திட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிப்பில் உள்ள பள்ளிகளுக்கு முதலில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகிறது; இத்திட்டம் அங்கே வெற்றிகரமாக நிறைவேறினால் மற்ற ஊராட்சி ஒன்றிப்புகளுக்கும் அதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்”

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

பல்வேறு துணைக் கேள்விகட்கும் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

“பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிப்பில் 54 பள்ளிகள் இருக்கின்றன. எல்லாப் பள்ளிகளுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய ஓர் இடத்தில் சமையல் செய்து, அதை இரண்டு மூன்று மோட்டார் வண்டிகளில் எடுத்துச் சென்று எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுக்கப்படும்.

“இந்த ஒன்றிப்பில் 45 பள்ளிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில்—சங்கடம் எதுவுமின்றி உணவைக் கொண்டுசேர்த்துவிட முடியும். சரியான பாதை வசதியில்லாத காரணத்தால் மிச்சமுள்ள 9 பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்வதில் சிக்கல் இருக்கிறது.

“இந்தத் திட்டத்தின்படி, சமையல் கட்டிடச் செலவை ‘கேர்’ நிறுவனத்தாரே ஏற்கின்றனர். கட்டிடத்துக்கான இடத்தையும், காய்கறி பயிரிடுவதற்காக ஒரு 15 ஏகர் நிலத்தையும் நாம் தரவேண்டும். கூலியாட்களுக்கான செலவையும் நாம் தரவேண்டும்.

“இத்திட்டத்தின்படி உணவு எளிதாகவும், தொல்லையின்றியும், தூய்மையாகவும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

“மதிய உணவுத் திட்டத்தின் நோக்கம் சிறந்ததுதான். அதில் சில குறைபாடுகளும் இருக்கிறது. அதே நேரத்தில், ஆர்வமும் அக்கறையும் கொண்டு சிறப்பாகப் பணியாற்றும்இடங்களும் இருக்கின்றன.

“எல்லாவற்றையும் ஆராய்ந்து, திட்டம் சிறப்பாகவும், ஒரே சீராகவும் செயல்பட அரசு ஆராய்ந்துவருகிறது.

“ஏழைப் பிள்ளைகளுக்கும், அன்றாடம் உணவுக்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் படிப்பில் ஊக்கம் ஏற்படச் செய்ய வேண்டும் என்பதற்காகவே இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. குறைந்தது மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்கேனும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பது நோக்கம்.

“இது நிறைவேற்றப்பட்டு விடுமேயானால், பிறகு படிப்படியாக—நிலைமைக்கேற்ப மதிய உணவளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்திக் கொள்ளலாம்.”

அசாம் மாநில சீரமைப்புப் பிரச்சினை

தலைவர்களிடை உடன்பாடு இல்லை

புதுடில்லி, ஜூலை 9—

அசாம் மாநிலச் சீரமைப்புப் பற்றிய அசாம் தலைவர்கள் மாநாடு, சரியான தீர்வு காணாத நிலையில் இன்று முடிந்தது.

தங்கள் நிலைகளிலிருந்து மாற மலைப் பகுதித் தலைவர்களும், சமவெளிப் பகுதித் தலைவர்களும் பிடிவாதமாக மறுத்துவிட்டனர்.

இருதரப்பினரிடையேயும் உள்ள பிளவு தீர்க்க முடியாத அளவுக்கு இருந்தது; தீர்வு காணுவதற்கென அமைக்கப்பட்ட 12 பேர் உள்ள குழுவை ஆகஸ்டு இறுதிவரை நீடிக்க முடிவு செய்தபோது, இக்குழுவை ஏற்றுக்கொள்வதற்கில்லையென மலைப் பகுதித் தலைவர்கள் அறிவித்தனர்.

போலீசு நிலையத்தில் போலீசு சோதனை!

கோழிக்கோடு, ஜூலை 8—

தாமரைச்சேரி போலீசு நிலையத்தைச் சோதனைசெய்யும் பொருட்டு மாவட்ட போலீசு அதிகாரிக்கு வாரண்டு அனுப்பும்படி மாவட்ட மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் சட்டவிரோதமாக மேற்படி போலீசு நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சிலர் கொடுத்த புகாரின் பேரிலேயே மாஜிஸ்திரேட் மேற்கண்ட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அரிசி ஆலைக்காரருக்குத் தண்டனை

கிருஷ்ணன்கோயிலில் உள்ள ஓர் அரிசி ஆலைக்கு உரிமையாளரான என். கே. நாகமணி என்பவர், அரசுக்கு நெல் அரைத்துக் கொடுப்பதற்காக ரூ. 5,000 முன்பணம் கட்டி அனுமதி பெற்றிருந்தார்.

ஆனால், அரசுக்குச் சொந்தமான நெல்லிலும், அரிசியிலும் இருப்பு சரியில்லை எனக் கண்டு பிடிக்கப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், முன்பணம் ரூ. 5,000-மும் பறிமுதல் செய்யப்பட்டு மேலும் ரூ. 100 அபராதமும் விதிக்கப்பட்டது.

கல்நார் கூரைகள் கொண்ட புதிய குடிசைகள்

சென்னை, ஜூலை 9—

“சமீபத்தில் நடந்த தீ விபத்துக்களால் வீடிழந்திருக்கும் சென்னை நகர மக்களுக்கு கல்நார் அல்லது தார் பீப்பாய் தகடுகளினாலான கூரைகளைக் கொண்ட புதிய குடிசைகள் அடுத்த எட்டு நாட்களில் தயாராகிவிடும்”

என்று, மாநகராட்சி ஆணையர் அம்பாசங்கர் கூறினார்.

நியாயத்திற்காகப் போராட வாரீர்!

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா அன்பழைப்பு

“சேலம் இரும்பாலை பற்றி இப்போது இங்கு கூறப்பட்டது. ‘அது எவ்வளவு நாளைக்குத்தான் தூங்கிக்கொண்டிருப்பது?’—என்ற கேள்வி, மக்களிடையே எழுந்துள்ளது.

“19-வது நூற்றுண்டிலேயே இந்த இரும்பாலை ஆராய்ச்சி துவங்கிவிட்டது. இதுபற்றி 20 ஆண்டுக் காலமாகப் பேசியாகிவிட்டது!

“மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தத் திட்டம் இணைக்கப்பட்டும் விட்டது!

“இதற்குப் பிறகும், ‘நீங்கள் சேலம் இரும்பாலையை ஆரம்பித்தால் ஆரம்பியுங்கள்; இல்லையென்றால் நாங்கள் ஆரம்பிக்கிறோம்’ என்று கூறுவது - போலீசாரிடம், ‘நீ கண்டுபிடித்தால் கண்டுபிடி; இல்லையென்றால் நான் பார்த்துக்கொள்கிறேன்’ என்பதற்குச் சமம்!

“சேலம் இரும்பாலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லையே என்ற மனக்குறை எங்களைவிட, ஒருவேளை எதிர்க் கட்சித் தலைவருக்கும் இருக்கலாம்; காங்கிரசுக்காரர்களுக்குக்கூட இருக்கலாம்; ஆனால், ‘சேலம் இரும்பாலைத் திட்டம் நியாயம்; டில்லி செய்வது சரியல்ல’ என்று கூற. கட்சிக் கட்டுப்பாடு தடுக்கலாம்!

“ஆனால், நியாயத்திற்காகச் சில விஷயங்களில் கட்சிக்கு அப்பாற்பட்டு ஒன்றுசேரலாம்: அதற்குரிய நாள்தான் எழுச்சி நாள்!

“எழுச்சி நாளில் விரும்பத்தகாதவைகள் ஏற்படலாம்—என்று அஞ்சும் காங்கிரசுக்காரர்களுக்குக் கூறுவேன்—உங்களைப் போன்ற நல்லவர்கள் பங்குகொண்டால் விரும்பத்தகாதவை கூடத் தடுக்கப்படலாம்; அதற்காகவாவது எழுச்சி நாளில் சேர வாருங்கள்—என்று அன்புடன் அழைக்கிறேன்!”

--முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில் தொழில்துறை மானிய விவாதத்தின்மீது குறுக்கிட்டுப் பேசுகையில்)

அண்ணா பேச்சு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எனக்கு ரொம்ப நிம்மதி ஏற்படும்; எதற்கு வேண்டுமானாலும் வலிவு தேடிக்கொள்ளுங்கள்.

ஆனால், கைக்கு வலிவு தேட வேண்டுமென்றால், ‘டம்பல்ஸ்’ எடுத்து வலிவு தேடிக்கொள்ள வேண்டும்.

அதை விட்டுவிட்டு, ‘வலிவு வர வேண்டும்; வலிவு வரவேண்டும்’ என்று தரையைப் போட்டுக் குத்திக்கொண்டிருந்தால், ‘வலி’தான் ஏற்படுமே தவிர, ‘வலிவு’ வராது!

ஆகவே, வலிவு தேடிக்கொள்ள எந்த முறையைக் கையாண்டாலும், என்.ஜி.ஓ.-க்கள் விஷயத்தில் எங்களுக்கு அக்கறை இல்லை என்ற எண்ணத்தில் நீங்கள் இருக்கத் தேவையில்லை!

அவர்கள் விஷயத்திலும் நாங்கள் மிகுந்த அக்கறைகாட்டி, தக்க நேரத்தில் தக்கதைச் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.”

342 அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டன

கோவை, ஜூலை 9—

சென்ற வியாழன் இரவு கருமத்தம்பட்டியில், எச்சரிக்கைக் குழுவினரால், ரூ. 34,200 மதிப்புள்ள 342 மூட்டைகள் அரிசி கைப்பற்றப்பட்டன. இந்த மூட்டைகள் தகுந்த அனுமதியில்லாமல் 17 மாட்டு வண்டிகளில் கொண்டு செல்லப்பட்டன. இது தொடர்பாக 19-பேர் கைது செய்யப்பட்டனர்.

கோவை மாவட்டத்தின் பல பகுதிகளில், காவல் துறையினர் இம்மாதத்தில் முதல் நான்கு நாட்களில் 113 மூட்டை சோளம், 111 மூட்டை ராகி, 39 மூட்டை அரிசி ஆகியவற்றைத் தகுந்த அனுமதியின்றி மாட்டு வண்டிகளிலும், லாரிகளிலும் கடத்திச் செல்லும் போது கைப்பற்றினர்; இவைகளின் மதிப்பு ரூ. 26,300.

‘அச்சத்திற்கு அவசியமில்லை’

கதர் குறித்து அமைச்சர்

திருச்சி, ஜூலை 9—

“தமிழ் நாட்டில் கதர்த் தொழிலின் எதிர்காலம் குறித்து சில பகுதிகளில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது; அதற்கு அவசியமே இல்லை; தி.மு.க. ஆட்சியின்கீழ் கதர்த் தொழிலுக்கு மேலும் ஆதரவு கிடைக்கும்”

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி கூறினார்.

வருவாய்த்துறை விதிகள் மாற்றப்படுமா?

சென்னை, ஜூலை 10—

வருவாய்த் துறையின் நிலை விதிகளை (ஸ்டாண்டிங் ஆடர்க்ள்) திருத்தியமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை என்றும், அவ்வப்போது நிலைமைக்கேற்ப திருத்தப்பட்டு வந்திருக்கிறது என்றும், இப்போது நில வரி நீக்கத்தின் காரணமாகத் திருத்தம் தேவைப்படுமா என்பது யோசிக்கப்படும் என்றும் வருவாய்த்துறை யமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

பன்மொழிப் புலவர் மணிவிழா

இத்திங்கள் 12-ஆம் நாள் சென்னையில் நடைபெறவிருந்த பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் 60-வது ஆண்டு மணிவிழா, சென்னை நகரில் தீ விபத்துக்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று விழாக் குழுச் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

வருவாய் தரும் தொழில் மாநில அரசிடம் இல்லை!

இயற்கை வளத்திற்கேற்ப தொழில்கள் துவக்கப்படவுமில்லை!

முந்திய அரசின் தொழிற் கொள்கை பற்றி முதலமைச்சர் அண்ணா

இயற்கை வளத்திற்கேற்ற அளவு தொழில்கள் துவக்கப் பட வேண்டும்.

தொழில் மூலம் வரும் வருவாய் சமூகத்தில் எல்லாப் பகுதி களுக்கும் கிடைக்க வேண்டும்.

கூடிய அளவில், தொழில் மூலம் வரும் வருவாய் மாநில அரசுக்குக் கிடைக்கவேண்டும்.

"இந்த மூன்றும் இப்போது உண்டா என்றால் இல்லை!

"இயற்கை வளம் இருக்கிற அள விற்கேற்பத் தொழில் துவக்கப் பட்ட ஒரு சில தொழில்கள்கூட, மாநில அரசின் வருவாய்க்குரிய தாக இல்லை—மத்திய அரசுக் குரியதாக இருக்கிறது! அப்படி யிருந்தாலும், 'வேலை வாய்ப்புக் கிடைக்கிறதே' என்று சிலர் கேட்கலாம்.

"அந்தத் தொழிலே மாநில அர சுக்கு இருக்குமானால், வேலை வாய்ப்புத் தருவதோடு வரி இல் லாத வருவாய் கிட்டும்; அதன் பயனாக, ஏழை மக்களை வாட்டி வதைக்கும் வரிகளில் பல வற்றை நீக்க வழி ஏற்படும்!

"ஆனால், மாநில அரசு தற் போது மேற்கொள்ளும் தொழில்களில் வருவாய் இல்லை!

"மின்சாரம் நீர்ப்பாசனத் துறை களில் வட்டிக்குரிய பணத்தைக் கூட ஈட்ட முடியாத நிலை ஏற்பட் டிருக்கிறது!

"ஆனால், ஒரே ஒரு தொழில் —உதகையிலுள்ள கொய்னா தொழிற்சாலை மூலம் இலாபம் கிட்டுகிறது; 10 ஆண்டுகட்கு முன்பு, 'அந்தத் தொழிற்சாலை யைக்கூட மூடிவிட வேண்டும்' என்ற கோரிக்கை இருந்துவந் தது! ஆனால், நிலைமை மாறி சிறிது இலாபம் ஏற்பட்டிருக் கிறது—அந்த ஒரு தொழிலில் மட்டும்!

"பஸ் போக்குவரத்துத் துறை யில் நகர பஸ்களில் நஷ்டமும், வெளியூர் பஸ்களில் லாபமும் கிடைக்கிறது!

"ஆகவே, இலாபம் தரும் பெரிய தொழில்களை மாநில அரசு ஏற் றுக்கொள்ள வேண்டும் என்பது கொள்கை அடிப்படையில் மட்டுமல்லாமல், தேவை அடிப் படையில் ஏற்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்!

"பூவராகன் பேசும்போது, நான் வேடிக்கையாகக் குறிப்பிட்ட ஒன்றைச் சுட்டிக்காட்டினார்; மின்சார விசிறிகளை எடுத்து விட்டு ஓலை விசிறிகளைத் தந்தால் ஓர் இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்; அரிசி ஆலைகளை எடுத்துவிட்டு கைக் குத்தல் முறையைத் துவக்கி னால் இன்னும் ஓர் இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்' என்று நான் பேசி யது பற்றி மக்கள் என்ன நினைப் பார்கள்—என்று கேட்டார் பூவ ராகன்.

"வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்பதற்காக நான் அதைக் கூறினேன்; ஆனால் பூவராகன், மக்கள் என்ன நினைத்துக்கொள்வார் கள்?' என்று கேட்கிறார்!

"எனக்குக் கொஞ்சம் பொது மக்களிடம் பழக்கம் உண்டு; அவர்கள் நம்மைவிட நன்றாகப் புரிந்துகொள்வார்கள்; அவர் கள் மனத்தில் எந்தவிதமான குழப்பமும் இல்லை; ஒருவேளை, இனி அந்தக் குழப்பத்தை ஏற் படுத்த முயற்சிக்கலாம்; 'முயற் சிக்கலாம்' என்று நான் கூறிய தற்குக் காரணம், நண்பர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டால் வெற்றிபெற முடியாது என் பதற்காகத்தான்!"

—(சட்டமன்றத்தில்)

1,000 நாள் சாதனையைவிட 100 நாள் சாதனை அதிகம்

'இங்கே பேசிய காங்கிரசு உறுப்பினர்கள், 'பெரிய தொழில்கள் துவக்கப்பட வில்லை; பொருளாதாரத் துறை மந்தநிலையில் இருக்கிறது' என் றெல்லாம் கூறினார்கள்.

"பல தொழில்களை நடத்தப்பட முடியாமல் இருப்பதற்கு தொழில் தகராறு காரணமாக இருக்கலாம்; முதலாளிகள் மூல தனத்தை வேறு தொழில் களுக்கு திருப்பிவிடுவது காரண மாக இருக்கலாம்; தொழில் பாதுகாப்பு இல்லாத நிலை கார ணமாக இருக்கலாம்; அல்லது, இவை அனைத்துமே காரணங் களாக இருக்கலாம்.

"ஆகவே, இந்த மந்த நிலை தொழில்துறையில் போக்கப் பட வேண்டும் என்பது பொறுப் புள்ள அரசின் முதற்கடமை யாக இருக்கமுடியும்.

"'புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தினோம்' என்ற ஒரு பட்டியலைத் தருவதைவிட, இந்த மந்த நிலை போக்கப்படு வதுதான் முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.

"'நாங்கள் என்ன செய்தோம் தெரியுமா?' என்று பூவராகன் போன்றவர்கள் பேசுவதால், கீழ்க்கண்ட விவரத்தைக் கூற வேண்டியிருக்கிறது.

1964--65-ம் ஆண்டில் துவக்கப் பட்ட தொழில்களின் விவரம்:—

தனியார் துறை:	40
கூட்டுறவுத் துறை:	இல்லை
மாநில அரசுத்துறை:	இல்லை
மத்திய அரசுத்துறை:	இல்லை

1965--66-ம் ஆண்டில்:

தனியார்துறை:	12
கூட்டுறவுத்துறை:	9
மாநில அரசுத்துறை:	இல்லை
மத்திய அரசுத்துறை:	3

1966--67-ம் ஆண்டில்:

தனியார்துறை:	12
கூட்டுறவுத்துறை:	2
மாநில அரசுத்துறை:	இல்லை
மத்திய அரசுத்துறை:	2

1967--68-ல்—அதாவது இந்த ஆட்சிக்காலத்தில்:

தனியார்துறை:	5
கூட்டுறவுத்துறை:	இல்லை
மாநில அரசுத்துறை:	5
மத்திய அரசுத்துறை:	2

"ஆகவே, தொழிற்துறையில் ஒன்றுமே செய்யவில்லை என்று பேசிக்கொண்டு போவதில் பொருளில்லை!

"'எல்லாமே எங்கள் ஆட்சியில் செய்துவிட்டோம்' என்று நினைக் கும் காங்கிரசுக்காரர்கள், டாக் டர் லோகநாதன் குழு—அவர் கள் காலத்தில் என்னென்ன தொழில் வாய்ப்புகள் இருக்கின் றன என்பது பற்றி அளித்த அறிக்கையைக் கொஞ்சம் ஓய்வு நேரத்தில் புரட்டிப் பார்க்கட்டும்!

"'என்ன செய்துவிட்டார்கள் இவர்கள்' — என்று கேட்பது, 'நாங்கள் ஆட்சிக்கு வந்துவிட் டோம்' என்பதிலுள்ள அதிர்ச்சி யின் ஒரு கிளையே தவிர, வேறல்ல!

"ஆட்சிக்கு வந்த மூன்று மாதத் திலேயே பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, நிலக் கரிச் சுரங்கம் போன்ற தொழில் களைத் துவக்கிவிட முடியும் என்று எதிர்பார்க்கிறார்களா?

"நாங்கள் வருவதற்குமுன் புதைந்து கிடந்த 'பைல்'களைத் தோண்டி எடுப்பதற்கே இவ் வளவு நாட்கள் ஆகிவிட்டன!

"வேண்டுமானால், அவர்கள் ஆட்சிக்கு வந்த நூறு நாட்களில் செய்ததையும், நாட்கள் ஆட் சிக்கு வந்த நூறு நாட்களில் செய்ததையும் ஒப்பிட்டுப் பார்க் கட்டும்!

"இன்னும் வேண்டுமானால் சொல்வேன்—நீங்கள் ஆயிரம் நாட்களில் செய்ததைவிட, நாங் கள் நூறு நாட்களில் அதிகம் செய்திருக்கிறோம்!

"கருத்திருமன் அவர்கள் பேசும் போது, 'சுதந்தரம் பெற்ற பிறகு தானே இந்தத் தொழில் முன் னேற்றம் எல்லாம்?' என்று கேட்டார்.

"சுதந்தரம் கேட்டதே இதற்கா கத்தானே? 'குளித்த பிறகு தானே சுத்தமாக இருக்கிறேன்' என்றால், குளிப்பதே சுத்தமாக இருப்பதற்குத்தான்!

"இப்படி நீங்கள் பேசுவதால் பழையதையும் கிளற வேண்டி யிருக்கிறது.

சுதந்தரம் வருவதற்கு முன்பேகூட பெரம்பூரில் தொழிற்சாலை, சிறிய அளவில் இருந்திருக்கி றது; பொன்மலையிலும் தொழிற்சாலை இருந்திருக்கி றது; பி. அண்டு சி. ஆலையும், கோவை நகரத்து ஆலைகள் பல வும், வெள்ளைக்காரன் காலத் திலேதான் ஏற்பட்டன.

"பார்த்தீர்களா? நீங்கள் கிளறு கிற காரணத்தால்தான், எனக் கும் பிடிக்காத வெள்ளைக்காரன் காலத்து சாதனைகளையும் எடுத் துக்கூற வேண்டியிருக்கிறது!

"உள்ளபடியே நீங்கள் கணக்குப் பார்க்க விரும்பினால், இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து, 'நீ ஐந்து ஆண்டுகளில் இதைச் செய்தாய்; நான் ஐந்து ஆண்டு களில் இதைச் செய்தேன்'— என்று கணக்குப் பார்க்கலாம்!

"இப்போதே ஆட்சியை விட்டுப் போய்விடலாம் என்றால், கணக்கை இன்றே பார்க்கலாம் ஆனால் அவர்கள் (காங்கிரசார்) '5 ஆண்டுகளும் நீங்களே இருக்கவேண்டும்' என்றுதானே கூறுகிறார்கள்!"

---முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

தி. மு. க. ஆட்சியின் தொழிற்கொள்கை

"எங்களுடைய தொழிற் கொள்கை என்ன என்று கேட் கும் நண்பர்களுக்குக் கூறிக் கொள்வேன்—

1. தொழில் துறையிலுள்ள இன்றைய மந்தநிலை முதலில் போக்கப்பட வேண்டும்.
2. தொழில் துறையில் சுமூக மான உறவு இருக்க வேண் டும்.
3. தொழில் துறை வருவாய், சமூகத்தின் எல்லாப் பகுதி களுக்கும் பரப்பப்பட வேண் டும்.
4. புதிய தொழில்கள், கூடிய அளவில் மாநில அரசுக்கு வருவாய் தரத்தக்க அளவில் அமைக்கப்பட வேண்டும்.

"இதற்கு ஏதாவது தலைப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்குமே தவிர, இதுதான் இந்த அரசு கடைபிடிக்கும் தொழிற் கொள்கை.

"20 ஆண்டுகளாகக் காங்கிரசு ஆட்சி செய்ததைத் திருப்பித் திருப்பி எங்கள் கழக உறுப் பினர்கள் பேசிவருவது கண்டு எதிர்க் கட்சித் தலைவர் வருத்தப் பட்டார்; இதிலொன்றும் தவ றில்லை; இன்றுகூட சிலர், கார்டு–கவர் எழுதும்போது துவக்கத்தில், 'ஸ்ரீராம ஜெயம்' என்று போட்டுவிட்டுத்தான் எழுதுவார்கள்......!

கருத்திருமன்:—"இராம ஜெயத்தை முதலமைச்சர் நம்பு கிறாரா?"

முதலமைச்சர்:—"நான், 'இல்லை' என்று கூறினால், உடனே, 'அண்ணாதுரைக்கு ராமஜெயத் தின்மீது நம்பிக்கை இல்லை என்று பிரச்சாரம் செய்ய நீங்கள் நினைக்கலாம்; ஆனால், இது பழைய பாணி!

"ஸ்ரீராம ஜெயம் என்று கார்டு–கவர்களில் எழுதுவது பழைய பழக்கத்தைக் காட்டு வது; இராமன் ஜெயம் பெற்றுப் பல ஆண்டுகளாகிவிட்டன; மேலும், அது கதை என்பது அதை எழுதுபவர்களுக்கே தெரியும்; இருந்தாலும் பழக்கத் தின் காரணமாக எழுதுகிறார் கள்!

"ஆனால் எதிர்க் கட்சித் தலைவ ருக்குக் கூறுவேன் — சில ஆண்டுகளுக்கு இதிலிருந்து நீங் கள் தப்பிக்க முடியாது! இது மாதிரியான பேச்சு எதுவரை இருக்கும் என்றால், நீங்கள் பழைய பாத்தியதையைக் கொண்டாடும்வரை இருக்கும்!

'வேண்டுமானால், ஒரு 'கனவான் கள் ஒப்பந்தம்' செய்துகொள் வோம்; நீங்கள் பழைய கால பாத்தியதையைக் கூறுவதை விட்டுவிடுங்கள்; நாங்களும் அதிலுள்ள குறைகளைக் கூறு வதை விட்டுவிடுகிறோம்.

"ஆனால், உள்ளபடியே அப்படி நீங்கள் செய்ததைப் பற்றிக் கூறினாலும் தவறு இல்லை. நாங் கள் அந்த ஆட்சிக் காலத்தில் செய்ததில் இன்னின்ன குறை கள் என்று கூறினால், நீங்கள், 'அது குறைகள் அல்ல' என்று நிரூபிக்கலாம். அது எங்களுக் குக்கூட நல்லது!

"இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், யார் எந்த நல்ல கருத்தைச் சொன்னாலும் அதைக் கவனித்து ஆராயத் தயாராய் இருக்கிறது!"

---முதலமைச்சர் அண்ணா
(தொழில் மானிய விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில்)

பிற்பட்ட பகுதிகளிலேயே புதிய தொழில்கள் துவக்கப்படும்

மூடிய ஆலைகளைத் திறக்க முழு முயற்சி செய்யப்படுகிறது

கைத்தறியாளருக்குத் தேவையான நூல் கிடைக்க ஏற்பாடு-- சட்டமன்றத்தில் தொழில் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, ஜூலை 8—

தொழில்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கோவை பஞ்சாலைகளில் சில மூடப்பட்ட சூழ்நிலையையும், அத னால் ஆயிரக்கணக்கானோர் வேலை இழந்து தவிப்பதையும் பற்றி விவரித்துவிட்டு மேலும் குறிப்பிட்டதாவது:—

"லோகநாதன் குழு அறிக்கை யின்மீது அரசு பரிசீலித்தது; 'சுமார் ரூ. 50 இலட்சம் வரையில் கொடுத்து உதவி செய்தால் நன்கு நடந்த பஞ்சாலைகளை மீண்டும் திறக்க முடியும்; மேற்கொண்டு மற்றும் ஒரு ஏழு மில்களைத் திறக் கவும் முடியும்' என்று அந்த அறிக்கை கூறியது.

மேற்படி மில்களுக்கு பணம் கடன் உதவி அளிப்பது சம்பந்த மாக 14 பாங்கிகளும்—மில் அதி பர்களும் கூடிப் பேசி வருகிறார் கள்; அவர்கள் ஒரு ஒப்பந்தத் திற்கு வந்தால், மேற்படி மில் களுக்கு பாங்கிகள் அளிக்கும் கடன் தொகைகளுக்கு அரசாங் கம் உத்தரவாதம் அளிக்கும். இது சம்பந்தமாக விரைவிலேயே ஆலோசனைகள் முடிந்து மீண்டும் மில்களை திறக்கும் வாய்ப்பு ஏற் பட்டுள்ளது.

பின்தங்கிய பகுதிகளிலேயே தொழிற்சாலைகள் உருவாகும்

பின்தங்கிய பகுதிகளில்தான் புதிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டும் என்ற உறுதியான கருத்தை இந்த அரசாங்கம் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகத் திட் டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகியவற்றை வற்புறுத்த இந்த அரசாங்கம் உறுதிகொண்டிருக் கிறது.

வேளாண்மைத் துறையில் இருப்பவர்கள்தான் இந்த நாட்டில் அதிகம்; அடுத்தது கைத்தறித் தொழிலில் ஈடுபட்டவர்கள்தான். இவர்களை நவீனத் துறையில் ஈர்த் துக்கொள்ளும் வகையில் தொழில் துறை சுறுசுறுப்பாக இயங்கிவரு கிறது.

அரக்கோணத்தில் இரும்பு உருக்காலையும், இராசபாளையத் தில் சிமெண்டு ஆலையும் துவக்கப் படவிருக்கிறது.

குறைந்த அளவு சுண்ணாம்புக் கற்கள் கிடைத்தாலும், சிறு சிறு தொழிற்சாலைகள் துவக்க டால் மியாபுரத்தில் பரீட்சார்த்தத் திட் டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நூற்பாலைகளில் கதிர்களை அதி கப்படுத்தி, கைத்தறி நெசவாளர் களுக்கு நூல் அதிகம் கிடைக்கும் வழி ஏற்படுத்த அரசு முயன்று வருகிறது."

நடக்க இருப்பவை

12--7--67

சென்னை—சேத்துப்பட்டு

வ. உ. சி. இளைஞர் கழக 19-ஆம் ஆண்டு நிறைவு விழா— பாராட்டுக் கூட்டம்; இரவு 7-மணிக்கு வைத்தியநாத முத லித் தெருவில்; தலைவர்: பி. சீனிவாசன்; பாராட்டுப் பெறு வோர்; அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்த சாமி; பாராட்டுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மா.கி. தசரதன், துரை முருகன், சி. ஆர். கோலப்பா, சா. முத்து, சே. பா. சடகோபால், என். ஏகாம்பரம்.

ஐக்கிய அரபுக் குடியரசு ஒப்புதல் அளித்தது!

போர் நிறுத்த உடன்பாட்டை மேற்பார்வையிடுவதற்கு சூயஸ் கால்வாய் நெடுகிலும் ஐ. நா. பார் வையாளர்களை நிறுத்துவதற்கு ஐக்கிய அரபுக் குடியரசு ஒப்புதல் அளித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவ ராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாரா யண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.